**விருதுநகர், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**பிறப்பிப்பவர்: திருமதி.க.விஜயா, பி.எஸ்ஸி(விவ)**

**எண். ஆ3/16244/2023** **நாள்: 18.01.2024**

| | |
|---|---|
| பொருள் | பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப் பணி - இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) தொகுதி-4-ல் அடங்கிய சிவில் சர்விஸ் தேர்வு - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடி நியமனம் - தேர்வு நடைபெற்ற நாள்.24.07.2022 (அறிவிப்பு நாள்: 30.03.2022) - திருமதி.பா.பானுப்பிரியா அவர்களுக்கு இளநிலை உதவியாளர் (பி.அ)-ஆக விருதுநகர் வேளாண்மை இணை இயக்குநர் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது - தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக. |
| பார்வை | 1. சென்னை, வேளாண்மை ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அநிபி 5 /92705/2023 நாள்: 08.12.2023<br>2. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.ஆ3/16244/2023 நாள்: 19.12.2023<br>3. திருமதி.பா.பானுப்பிரியா, இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) அவர்களின் பணியேற்பு நாள்: 21.12.2023<br>4. சென்னை, வேளாண்மை ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அபபி 5 /1000/2024 நாள்: 03.01.2024 |

*****

<u>ஆணை:-</u>

பார்வை(1)-ல் காணும் செயல்முறை ஆணையின்படி, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் 24.07.2022-ல் நடைபெற்ற தொகுதி-4 தேர்வில் (அறிவிப்பு நாள்: 30.03.2022) தமிழ்நாடு அமைச்சுப்பணியின்கீழ் இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) பதவிக்கு நேரடி பணிநியமனம் மூலம் தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டு, வேளாண்மைத் துறைக்கு தேர்வு செய்யப்பட்ட திருமதி.பா.பானுப்பிரியா அவர்களை விருதுநகர், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது.

பார்வை(2)-ல் காணும் செயல்முறை ஆணையின்படி, தனியருக்கு திருச்சுழி (இ) ம.ரெட்டியபட்டி, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது)-ஆக பணிநியமன ஆணை வழங்கி ஆணையிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, பார்வை(3)-ன்படி, திருமதி.பா.பானுப்பிரியா அவர்கள் திருச்சுழி (இ) ம.ரெட்டியபட்டி, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது)-ஆக 21.12.2023 முற்பகல் பணியில் சேர்ந்து கொண்டார்.

பார்வை(4)-ல் காணும் கடிதத்தின்படி, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தமிழ்நாடு அமைச்சுப்பணியின்கீழ் இளநிலை உதவியாளர் (பிணையம்)/ (பிணையமற்றது) -ஆக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியாளர்களை அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் நடைமுறையில் உள்ள அரசு விதிகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணையிட அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது), திருமதி.பா.பானுப்பிரியா அவர்களுக்கு பணியில் சேர்ந்த நாளான 21.12.2023 முற்பகல் முதல் அரசு விதிகளுக்குட்பட்டும் சென்னை மற்றும் மதுரை உயர்நீதி மன்றங்களில் இது தொடர்பாக தொடரப்பட்ட வழக்குகளின் இறுதி தீர்ப்பிற்கு உட்பட்டும் கீழ்கண்ட விவரப்படி, பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

" The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High court of Madras/Madurai Bench of the Hon'ble High court of Madras relating to the recruitment to the post included in combined Civil Services Examination -IV (Group-IV).

| வ. எண் | பெயர் / பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | இளநிலை உதவியாளர் (பி.அ) ஆக பணியேற்ற நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | திருமதி.பா.பானுப்பிரியா,<br>இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது)<br>வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம்,<br>திருச்சுழி (இ) ம.ரெட்டியபட்டி. | 21.12.2023 முற்பகல் | 21.12.2023 முற்பகல் |

மேற்கண்ட பணியாளர் மூன்றாண்டு தொடர்பணி காலத்தில் ஈராண்டுகள் தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்யவேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

18.1.24
வேளாண்மை இணை இயக்குநர்,
விருதுநகர்.

18.1.24

பெறுநர் :
திருமதி.பா.பானுப்பிரியா,
இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது)
வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம்,
திருச்சுழி (இ) ம.ரெட்டியபட்டி.
--உரிய வழிமுறையாக--

மூலம் மற்றும் நகல் : வேளாண்மை உதவி இயக்குநர், திருச்சுழி (இ) ம.ரெட்டியபட்டி.

நகல் : சென்னை, வேளாண்மை ஆணையர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
(அநிபி/அபபி பிரிவுகள்)

நகல் : பணிப்பதிவேடு

நகல் : இருப்புக்கோப்பு

உபரி -1